**அசல் வழக்கு எண். 146/2019**

06.02.2024

**பெயர் –சரஸ்வதி (Pw1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(1) என் கணவருக்கும், பிரதிவாதிக்கு தனிப்பட்ட பூர்வீகச் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் இல்லை தாவாச் சொத்து பூர்விக சொத்து தான். என் கணவருக்கு சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து எதுவும் இல்லை. தாவாச் சொத்து மற்றும் வேறு ஒரு சொத்தையும் சேர்த்து 12.09.2011 ம் தேதிய கிரையப் பத்திரத்தின்படி பிரதிவாதி தன் சுய சம்பாத்தியத்தில் கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் ஒரு பகுதியை எனது கணவர் நாகராஜ்க்கு 13.06.2012 ம் தேதி 2014/2012 என்ற ஆவணத்தின் மூலம் பிரதிவாதி அவரது தம்பிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த சொத்தில் நானும், என் கணவரும் எங்கள் செலவில் வீடு கட்டி உள்ளோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(2) தாவாச் சொத்தில் ஒரு பகுதியை என் கணவருக்கு பிரதிவாதி செட்டில்மெண்ட் எழுதி வைத்த போதும் சொத்தில் உள்ள பிரதிவாதி கட்டிய ஓட்டு வீட்டில் இன்றைய தேதி வரை சுவாதீனத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீட்டில் சமயலறை கட்டி மின் இணைப்பு பெற்று வரி ரசீது செலுத்தி அனுபவத்தில் நான் தான் இருந்து வருகிறேன். பிரதிவாதியின் வீடும், தாவாச் சொத்தும் அடுத்தடுத்த உள்ள வீடுகள் என்றால் சரிதான். இடையில் ஆசாராத்தில் தட்டி வைத்து மறைத்தும் மற்ற இடங்களில் பொது சுவர் வைத்தும் உள்ளது. நான் சொல்லும்படி பொது சுவர் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்தின் உரிமையை தனது பெயருக்கு மாற்றி தரக்கூறி பிரதிவாதி என்னை மிரட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சொக்கலிங்கம் மிரட்டியது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. பிரதிவாதி என்னை மிரட்ட வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு மிரட்டியிருந்தால் நான்

காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(3) பிரதிவாதி எனது கணவர் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து விட்டார் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 30.12.2015 ம் தேதி தெரியும். 5296/2015 ஆவணத்தின்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துள்ளார் என்றால் தற்போது சாட்சி 30.12.2015 க்கு பிறகு தான் எனக்கு தெரியும் என்று கூறுகிறார். நான் தற்போது தாராபுரம் வட்டம் ரஞ்சிதாபுரத்தில் வசித்து வருகிறேன் என்றால் இல்லை. அது என் அம்மா ஊர் நான் அவ்வப்போது காரத்தொழுவிற்கும் வந்து போகிறேன். தாவாச் சொத்து முழுவதுமாக பிரதிவாதி வசம் உள்ள நிலையில் வழக்கிற்காக பொய்யாக நான் சுவாதீனத்தில் உள்ளேன் என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதி சொக்கலிங்கம் 5296/2015 செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

(4) தாவாச் சொத்தைப் பொறுத்து எனக்கு தனிப்பட்ட உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் தம்பி நாகராஜின் மனைவி என்பதால் சட்டப்படி நான் தான் மேற்படி சொத்திற்கு வாரிசு ஆவேன். என் கணவர் நாகராஜ் பெயரில் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை பிரதிவாதி ரத்து செய்த பிறகு என் கணவரின் வாரிசு என்ற அடிப்படையில் நான் தாவாச் சொத்தில் உரிமை கோர முடியாது என்று சொன்னால் தாவாச் சொத்தில் எங்கள் செலவில் வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று வசித்து வருவதால் உரிமை உள்ளது. மின் இணைப்பு, வீட்டுவரி ரசீது போன்ற ஆவணங்கள் என் பெயரில் இல்லை என்றால் என் கணவர் நாகராஜ் பெயரில். நான் தவறாக உரிமை பாத்தியம் கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் வீட்டு வரி பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு பிரதிவாதி வீட்டு வரி செலுத்தி வருகிறார். நான் அனுபவத்தில் உள்ள வீட்டிற்கும் வீட்டு வரி வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கின் முடிவை பொறுத்து கட்ட பஞ்சாயத்தில் கூறிவிட்டார்கள்.

(5) நாகராஜ் மனைவி இறந்த பிறகு யாரையும் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் நாகராஜ் முதல் மனைவி வேறு ஒருவரை திருமணம் செய்ததால் முறையாக விவாகரத்து பெற்று என்னை 2வது திருமணம் செய்து கொண்டார். நாகராஜ் நான் சொன்னபடி அவரது மனைவியை விவாகரத்து செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல என்னிடம் ஆவணம் உள்ளது. நாகராஜ் என்னை 2வது திருமணம் செய்து கொண்டதற்கு ஆதரவாக நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் ஆவணம் உள்ளது. நாகராஜ் என்னை 2வது திருமணம் செய்து கொள்ளவில்லை அவர் என்னுடன் பழகி இருந்த காரணத்தை வைத்து மோசடியாக குடும்ப அட்டை மற்றும் வாரிசு சான்றிதழ் பெற்று அவரது சொத்திற்கு நான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. நாகராஜ் எங்கு இறந்தார் என்றால் கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனையில் இறந்தார். மேற்படி நாகராஜ்க்கு மருத்து செலவு அனைத்தும் பிரதிவாதி சொக்கலிங்கம் தான் செய்தார் என்றால் மருத்துவ சிகிச்சை நான் தான் செய்தேன். அதற்கு என்னிடம் ரசீது உள்ளது. அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாகராஜின் பெற்றோருக்கு நான் வைத்திய செலவு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல எனது மாமியார் என்னுடன் இருந்தார். நான் அவரை பராமரித்தேன். அது சம்மந்தப்பட்ட மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீண்ட நாள் ஆனதால் அவை என்னிடம் இல்லை. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல எனவே தாவா சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

K VIJAYAKUMAR

Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2024.02.06 12:19:23 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்